முக்கிய வார்த்தைகள்:
அண்டை வீட்டுக்காரர்
உரிமை
குணம்
நன்மை

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**16 அக்டோபர் 2026 / 05 ஜமாதில் அவ்வல் ஹிஜ்ரி 1448**

# <u>இஸ்லாமும் அண்டை வீட்டார் சம்பந்தமான பண்பாட்டு நெறிமுறைகளும்</u>

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيلِ: يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து விலகி இருப்பதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீது தக்வா [பக்தியை] ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; அல்லாஹ்வின் அடியார்களில், எவர்கள் ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கையில் நிலைத்து நிற்கின்றார்களோ அவர்களில் ஒருவராக நாம் அனைவரும் ஆகுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

ரசூலுல்லாஹ்[ஸல்] அவர்களின் போதனைகளில் ஒன்று, நமது **அண்டை வீட்டாரைக்** கவனத்தில் கொள்வதாகும். இறைத்தூதர்[ஸல்] அவர்கள் கூறுகையில்: *"வானவர்களின் தலைவர் ஜிப்ரயீல் [அலை] அவர்கள் எனக்கு **அண்டை வீட்டாரைப்** பற்றி அறிவுரை கூறினார்கள்; எந்த அளவுக்கெனில், **அண்டை வீட்டாருக்கு வாரிசுரிமை** வழங்கப்பட்டு விடுமோ என நான் நினைக்கும் அளவுக்கு அண்டை வீட்டாரைக் கவனித்துக் கொள்வதைப் பற்றி எனக்கு உபதேசம் செய்தார்கள்"* எனக் கூறினார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்]

நாம் ஏன் நமது **அண்டை வீட்டாருக்கு நன்மை** செய்ய வேண்டும்? அல்லாஹ், அண்டை வீட்டாருக்கு நன்மை செய்வதை ஏன் நமது ஈமானின் [ஓரிறை நம்பிக்கையின்] அடையாளமாக ஆக்கியுள்ளான்? அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அன்னிஸா" எனும் அத்தியாயத்தின் 36-வது வசனத்தில் கூறுகின்றான்:

۞ وَٱعْبُدُوا۟ ٱللَّهَ وَلَا تُشْرِكُوا۟ بِهِۦ شَيْـًٔا ۖ وَبِٱلْوَٰلِدَيْنِ إِحْسَـٰنًا وَبِذِى ٱلْقُرْبَىٰ وَٱلْيَتَـٰمَىٰ وَٱلْمَسَـٰكِينِ وَٱلْجَارِ ذِى ٱلْقُرْبَىٰ وَٱلْجَارِ ٱلْجُنُبِ

பொருள்: *"மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள்; அவனுடன் எதையும் இணை வைக்காதீர்கள்; மேலும், தாய் தந்தையர்க்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், **அண்டை வீட்டிலுள்ள** உறவினர்களுக்கும், [அருகிலுள்ள] இன்னும் தூரத்திலுள்ள **அண்டை வீட்டாருக்கும்** அன்புடன் **உபகாரம்** செய்யுங்கள்"*

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ், மனிதர்களை ஒன்றிணைந்து வாழ்வதற்காகப் படைத்துள்ளான்; நமது குடும்பத்தைத் தவிர, நமக்கு மிகவும் நெருக்கமாக வாழ்பவர்கள் நமது **அண்டை வீட்டார்கள்** ஆவர். நமது உள்ளங்களை வளப்படுத்தும் விஷயம் எது? மக்களை ஒன்றுபடுத்தும் விஷயம் எது? என்பதை அல்லாஹ்

சுப்ஹானஹு வதஆலா, நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். தனது ஞானத்தால் **அண்டை வீட்டாரின் உரிமைகளையும்** அவர்களை நல்ல முறையில் நடத்துவதையும் நமது ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கையின் அடையாளமாக அல்லாஹ் ஆக்கியுள்ளான். காரணம், அது நம் உள்ளங்களை ஒன்றிணைத்து, நமது வாழ்க்கையை மேலும் அர்த்தமுள்ளதாக ஆக்குகிறது.

**அண்டை** அயலார் வாழ்வில், நாம் ஒருவரையொருவர் நமது உண்மையான நிலையை உள்ளபடியே காண்கிறோம். நாம் வீட்டை விட்டுச் செல்வதையும் திரும்புவதையும் நமது **அண்டை வீட்டார்** பார்க்கிறார்கள்; நாம் நமது குடும்பத்தாரிடம் பேசும் விதத்தை அவர்கள் கேட்கிறார்கள். மேலும், நாம் எதிர்கொள்ளும் சவால்களையும் சோதனைகளையும் நாம் எப்படிக் கையாளுகின்றோம் என்பதையும் அவர்கள் கவனிக்கிறார்கள்.

நாம் வெளிப்படுத்தும் **குணநலன்களையும்**, இஸ்லாத்தின் போதனை களையும் நமது **அண்டை வீட்டார் காண்கிறார்கள்.** இஸ்லாத்தின் போதனைகளை அவர்கள் இஸ்லாமிய மார்க்க உரைகளிலிருந்து அறியாமலிருக்கலாம்; ஆனால், நமது அண்டை வாழ்வில் நாம் வெளிப்படுத்தும் விழுமியங்கள் மற்றும் நடத்தைகள் மூலம் அவற்றை அவர்கள் அறிந்து கொள்கிறார்கள். எனவே இவ்விஷயத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

நாம் எவ்வாறு ஒரு **நல்ல அண்டை வீட்டாராக** இருக்க முடியும்? என்பதற்கு, இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களின் போதனைகளில் காணப்படும் பின்வரும் மூன்று எளிய வழிகளைக் கவனத்தில் கொள்ளுங்கள்:

**முதலாவதாக: அவர்களை அறிந்து கொள்ளுங்கள்**

ஒரு **நல்ல அண்டை வீட்டாராக** இருப்பதென்பது, அவர்களின் இருப்பை அங்கீகரிப்பதிலிருந்து தொடங்குகிறது; நாம் அண்டை வீட்டாரைச் சந்திக்கும் போது புன்னகைத்து, எளிய வார்த்தைகளால் அவர்களை வாழ்த்த வேண்டும்;

இது இறைத்தூதர்[ஸல்] அவர்களின் "சுன்னாஹ்" எனும் வழிமுறைக்கு இணக்கமானச் செயலாகும். மற்றவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதிலும் ஸலாமைப் பரப்புவதிலும் நாம் முன்முயற்சி எடுக்க வேண்டுமென இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நம்மை ஊக்குவித்துள்ளார்கள். காரணம், அதன் மூலம் அன்பு ஏற்பட்டு, அந்த அன்பு நம்மைப் பிணைத்து, ஒன்றுபடுத்தும்.

**இரண்டாவதாக: நமது உணவை அவர்களுடன் பகிர்ந்து கொள்வது**
ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் மேலும் உபதேசம் செய்துள்ளார்கள்:
*"நீங்கள் உணவுக்காக குழம்பு சமைக்கும் போது, அதில் இன்னும் கொஞ்சம் தண்ணீர் சேர்த்து அதிகமாகத் தயார் செய்யுங்கள்; அதில் சிறிதளவு உங்கள்* ***அண்டை வீட்டாருக்கும்*** *கொடுங்கள்"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]. அன்பான சகோதரர்களே! இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம் யாதெனில், நாம் சமைக்கும் உணவின் வகையோ அல்லது அதன் அளவோ இங்கு முக்கியமானதல்ல, மாறாக, நமது **அண்டை வீட்டாருக்காக** நாம் செய்யும் செயலின் பின்னணியில் உள்ள நல்ல நோக்கமும் சிந்தனையுமே முக்கியமாகும்.

**மூன்றாவதாக: அவர்களுக்குத் தேவைப்படும் போது உதவி செய்யுங்கள்**
குடும்பத்தைத் தவிர, **அண்டை வீட்டாருக்குத்** தான் நாம் முதலில் உதவி செய்ய வேண்டும்; அவர்கள் தான், முதலில் உதவி செய்யப்பட வேண்டியவர்கள்; காரணம், நமக்கு முதலில் உதவி செய்ய முடிகின்ற நிலையில் இருப்பவர்கள் அவர்களே; ஒருவர் கஷ்டத்தில் சிக்கும் போது, வெளி உதவி வந்து சேர நேரமாகலாம்; ஆனால் **அண்டை வீட்டார்கள்** அருகிலேயே தயாராக இருக்கின்றார்கள். எனவே, ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் பின்வரும் கூற்றைக் கவனித்தில் கொள்ளுங்கள்: ***"அண்டை வீட்டார்*** *பசித்திருக்க, தான் மட்டும் வயிறு நிறைய உண்பவர் உண்மையான "முஃமின்" [ஓரிறை நம்பிக்கையாளர்] அல்ல"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் பைஹகீ ரஹ்]

அன்புச் சகோதரர்களே சிந்தித்திப் பாருங்கள்! நமது **அண்டை வீட்டார்** துன்பத்தில் வாடும் போது, நாம் எப்படி சுகபோகமாக வாழ முடியும்? நமது

உள்ளம் அதற்கு இடம் தருமா? அல்லது நமது ஓரிறை நம்பிக்கையின் அழைப்பிற்கிணங்க, அவ்வாறு நடந்து கொள்வது ஒரு நல்ல விஷயமாக இருக்க முடியுமா?

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!

நமது இல்லங்களுக்கு யாரை அழைக்க வேண்டும் என்பதை நம்மால் தேர்ந்தெடுக்க முடியும்; ஆனால், நம் **அண்டை வீட்டார்** யார் என்பதை நம்மால் தேந்தெடுக்க முடியாது; யார் வேண்டுமாலும் நமது அண்டை வீட்டாராக அமைவதற்கு வாய்ப்புள்ளது. இது அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள நியதியாகும். மேலும், **அண்டை வீட்டார்** என அழைக்கப்படுபவர்களுக்கு உரிய **உரிமைகளை** இஸ்லாம் நிலைநாட்டியுள்ளது.

ஆகவே, நம்மால் முடிந்த வரை நமது **அண்டை வீட்டாரின் உரிமைகளை** நிறைவேற்றுவோமாக! அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா, நமது உறவுகளைத் தொடர்ந்து பாதுகாத்து, நமக்கு மத்தியில் நல்லிணக் கத்தையும் பாசத்தையும் ஏற்படுத்துவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اَلْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ

**عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.**

**عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.**